1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அதுவும் குன்னூரில் அந்த சீதோஷ்ண நிலை மிகவும் அருமையான சீதோஷ்ண நிலை ஆகும். அங்கே ஸ்வெட்டர் பின்னக் கூடிய நூல் இழைகள் சுருங்குவதும் இல்லை. விரிவடைவதும் இல்லை. அந்தச் சூழ்நிலையில் உருவாக்கப்படும் ஸ்வெட்டர்கள் மிகவும் குறைந்த விலையில் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கும் தனியார் ஒருவரால் பின்னப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அதையே அரசு எடுத்துக்கொண்டு அதைப்போல ஒரு ஆலை அமைத்தால் நாம் இராணுவத்திற்குக் கூட அதிக அளவில் ஸ்வெட்டர்களை வழங்கலாம். பல பேருக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி விசைத்தறி அமைப்பது பற்றியதாகும். இவர் ஸ்வெட்டர் தயாரிப்பது பற்றிக் கேட்கின்றார். அதற்குத் தனி கேள்வி போட்டால் பதில் தர இயலும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

பூலாம்பாடி பேரூராட்சி கலிங்கம் நீரோடைத் திட்டம்

*9144—திரு. தா. செழியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா —

(அ) பெரம்பலூர் வட்டம் பூலாம்பாடி பேரூராட்சியின் கலிங்கம் நீரோடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பூலாம்பாடி பேரூராட்சியில் 1958—ஆம் ஆண்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டு அத்திட்டம் இதுநாள்வரை செயல்படாமல் கிடப்பிலேயே இருக்கிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படுமே யானால், ஏறத்தாழ 3 ஆயிரம் ஏக்கரும், 3 லட்சம் விவசாய பெருங்குடி மக்களும் பயனடைவார்கள். எனவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூலாம்பாடி கலிங்க ஓடைத் திட்டம் ஏற்கனவே அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நிலத்தடி நீர் விரிவாக்கத்தைப் பொறுத்து அதன் மூலம் பாசன வசதி வருகின்ற காரணத்தினாலே இந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு உசிதமாக இல்லை. ஆகவே மறுபடியும் மாற்றுத் திட்டம் ஏதாவது எடுத்துச் செய்யலாமா என்று அதிகாரிகள் மட்டத்திலே விவாதிக்கப் பட்டு அதற்காக செலவுகள் அதிகமாகும் என்று நிலத்தை கையகப்படுத்திக் கொண்டிருக்கின்றபோது, அதற்காக காஸ்ட் வேல்யூ அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே இது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. இதுகுறித்து சட்டமன்ற உறுப்பினருடைய கேள்விக்கிணங்க மறுபடியும் ஏதாவது பரிசீலனை செய்யலாமா என்பதை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களின் பகவத்கீதையாக, கிறிஸ்தவர்களின் பைபிளாக, இஸ்லாமியர்களுடைய குரானாக, வள்ளுவனின் குறளாக அத்தனைக்கும் ஒருங்கே சக்தியைப் பெற்றிருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவி, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அடுத்த நிதியாண்டிலேயே

1993 மார்ச் 18]

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி தருவாரா என கேட்டுக் கொண்டு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் பணிவான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேள்வி கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : உறுப்பினருடைய தொகுதி மக்கள் மீது வைத்துக்கொண்டிருக்கிற நம்பிக்கை வெளிப்பாடாகத்தான் மிக ஆர்வத்தோடு எப்படியும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக இந்த அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 130, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

130—

போளூர் - அத்திமூர் சாலையில் மஞ்சள் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுதல்

*12100—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் — அத்திமூர் சாலையில் மஞ்சள் ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் கொண்ட அத்திமூர் மக்களுக்கு எல்லாம்